தமிழ்நாடு அரசு

வாய்மையே வெல்லும்

தமிழ் வளர்ச்சித் துறை

# திருவள்ளுவர் திருநாள், 1999

## திருவள்ளுவர் விருது-1999, சிறந்த நூல்களுக்குப் பரிசுகள், அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி விவரக் கையேடு

கலைவாணர் அரங்கம்

சென்னை

16 - 1 - 1999

திருவள்ளுவர் விருது-1999, சிறந்த நூல்களுக்குப் பரிசுகள்

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி

விவரக் கையேடு

73-10—1

தமிழ்நாடு அரசு, உலகப் பொது மறையாம் திருக்குறள் நெறிபரப்பும் பெருநோக்கில் ஆண்டுதோறும் தைத் திங்கள் இரண்டாம் நாளில், திருவள்ளுவர் திருநாளைச் சிறப்பாக நடத்தி வருகிறது.

## திருவள்ளுவர் விருது.

1986 ஆம் ஆண்டு முதல் திருக்குறள் நெறி பரப்பும் பெருந்தகையாளர் ஒருவரை அரசு தெரிவு செய்து திருவள்ளுவர் விருது ரூ. 20,000 வழங்கிச் சிறப்பித்து வருகிறது. இவ்விருது ஆண்டு தோறும் திருவள்ளுவர் திருநாள் விழாவில் வழங்கப்பெற்று வருகிறது.

இதுவரை இவ்விருது பெற்றோர் பட்டியல் வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. | 1986 | தவத்திரு குன்றக்குடி அடிகளார். |
| 2. | 1987 | திரு. கி. ஆ. பெ. விசுவநாதம். |
| 3. | 1988 | திரு. ச. தண்டபாணி தேசிகர். |
| 4. | 1989 | திரு. வ. சுப. மாணிக்கம். |
| 5. | 1990 | திரு. கு. ச. ஆனந்தன் |
| 6. | 1991 | திரு. சுந்தர சண்முகனார் |
| 7. | 1992 | டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் |
| 8. | 1993 | திரு. கல்லை தே. கண்ணன் |
| 9. | 1994 | திருக்குறளார் திரு. வீ. முனிசாமி |
| 10. | 1995 | திருமதி சு. சிவகாமசுந்தரி |
| 11. | 1996 | முனைவர் மு. கோவிந்தசாமி |
| 12. | 1997 | முனைவர் கு. மோகனராசு |
| 13. | 1998 | முனைவர் இரா. சாரங்கபாணி |

1999 ஆம் ஆண்டிற்குரிய திருவள்ளுவர் விருது முனைவர் வா. செ. குழந்தைசாமி அவர்களுக்கு வழங்கப்பெறுகிறது. விருதுத்தொகை ரூ. 1,00,000 மும் (ஒரு லட்சம்) ஒரு சவரன் தங்கப் பதக்கமும் வழங்கப் பெறுகிறது.

## திருவள்ளுவர் விருது — 1999.

### தகுதியுரை.

முனைவர் வா. செ. குழந்தைசாமி, கரூர் மாவட்டம் வாங்கலாம் பாளையம் எனும் ஊரில் 14—7—1929இல் பிறந்தவர். பொறியியல் தொழில் நுட்பவியல் துறைகளில் பட்டங்களும், நீர்வளத் துறையில் முனைவர் பட்டமும் பெற்றவர். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், பாண்டிச்சேரி மையப் பல்கலைக் கழகம் ஆகியவற்றால் டி.லிட் பட்ட மளித்துச் சிறப்பிக்கப் பெற்றவர். நீர்வளத் துறைப் பேராசிரிய ராகவும், தொழில் நுட்பக் கல்வித் துறை இயக்குநராகவும், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், அண்ணா பல்கலைக் கழகம், இந்திரா காந்தி தேசியத் திறந்த நிலைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் துணை வேந்தராகவும் பணியாற்றியவர். யுனெஸ்கோ வல்லுநர். நீர்வளத்துறையில் பல ஆய்வுக் கட்டுரைகளைப் படைத்துள்ளவர். இவரது கண்டுபிடிப்பு ஒன்று 'குழந்தைசாமி மாதிரி' என்ற பெயரில் நீர்வளத் துறை இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்க தாகும். கல்வி, அறிவியல் துறைகளில் இந்திய நாட்டளவிலும், பன்னாட்டளவிலும் பல்வேறு குழுக்களின் உறுப்பினராகவும், தலைவராகவும் பணியாற்றியவர். கல்வித் துறையில் ஆற்றிய தொண்டிற்காகப் பல்கலைக் கழக மானியக் குழுமத்தால் 'பிரணவானந்த அடிகளார்' விருதும், அறிவியலுக்கும் கல்விக்கும் ஆற்றிய தொண்டிற் காகக் குடியரசுத் தலைவரால் 'பத்மஸ்ரீ' விருதும் வழங்கப்பெற்றவர்.

அறிவியல் துறையிலும், கல்வித் துறையிலும் வல்லுநரான முனைவர் வா.செ. குழந்தைசாமி அன்னைத் தமிழின்பால் அளவிலாப்பற்றுடையவர் தெளிந்த சிந்தையர். தேர்ந்த பேச்சாளர். மரபு மணமும் புதுமைக் கருத்துக்களும் மிளிரக் கவிதை படைக்கும் ஆற்றலாளர். 'குலோத் துங்கன்' எனும் பெயரில் செறிவும் சிறப்பும் மிக்க செந்தமிழ்க் கவிதைகளை வழங்குபவர். அறிவியல் அணுகுமுறை, சீர்திருத்தச் சிந்தனை, தொலை நோக்குப் பார்வை ஆகியவற்றால் தமிழுக்கு வலம் சேர்க்க விழைபவர். தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவராகவும், ஆசிய ஆய்வியல் நிறுவனம் உலகத் தமிழ் ஆய்வுக் கழகம் ஆகியவற்றின் துணைத் தலைவராகவும், தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி மன்ற உறுப்பினராகவும் இருந்து தொடர்ந்து தமிழ்ப்பணி ஆற்றி வருபவர். தமிழ் எழுத்துச் சீரமைப்பு, கலைச் சொல்லாக்கம் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டு எழுதி வருபவர்.

'வளர்க தமிழ்', 'வாயில் திறக்கட்டும்', 'விண்சமைப்போர் வருக' முதலிய கவிதை நூல்களையும் 'அறிவியல் தமிழ்', 'தமிழ் எழுத்துச் சீரமைப்பு', 'வாழும் வள்ளுவம்' 'பாரதியின்

அறிவியல் பார்வை', முதலிய நூல்களையும் படைத்துள்ளவர். இது வரை இவரது தமிழ்ப்படைப்புகள் ஆறு கவிதைத் தொகுப்புகளாகவும், ஏழு உரைநடை நூல்களாகவும் வெளிவந்துள்ளன. தமிழ்ப் பணிகளுக்காகத் 'தமிழ்ச் செம்மல்' விருதும், 'செந்தமிழ்ச் செம்மல்' எனும் சிறப்புப் பட்டமும் வழங்கப்பெற்றவர். 'அறிவியல் தமிழ்' எனும் நூலுக்குத் தமிழ்நாடு அரசின் பரிசினையும் 'வாழும் வள்ளுவம்' எனும் நூலுக்குச் சாகித்திய அகாதெமி விருதினையும் பெற்றவர். 'வாழும் வள்ளுவம்' எனும் நூல் அறிவியல் பார்வையில் திருக்குறளுக்கு விளக்கம் நல்கும் தீந்தமிழ்ப் படைப்பாகும்.

திருவள்ளுவரின் நெறிப்போற்றியும், திருக்குறளுக்குப் பெருமை சேர்த்தும், இனிய நூல் பல படைத்தும் தமிழுக்கு ஆக்கமளித்துள்ள முனைவர் வா. செ. குழந்தைசாமி அவர்களின் பணியைப் பாராட்டிப் போற்றும் வகையில் தமிழ்நாடு அரசு அவருக்கு உருபாய் ஒரு இலட்சமும் தங்கப்பதக்கமும் கொண்ட 1999ஆம் ஆண்டிற்கான திருவள்ளுவர் விருதினை மகிழ்வுடன் வழங்குகிறது.

## தமிழில் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்.

"தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும் அழகு காப்பாய் இதுதான் நீ செயத்தக்க எப்பணிக்கும் முதற் பணியாம்" என்னும் பாவேந்தரின் முழக்கத்தை அரசு தலைமேற்கொண்டு, தமிழுக்கு அழகூட்டும் நன் முயற்சியின் விளைவாக உருவாக்கப் பெற்றதே இவ்வருந்திட்டம்.

எண்ணற்ற நூல்கள் வெளிவருகின்றன. கால நீரோட்டத்தை எதிர்த்துப் பயன்தரத்தக்கனவாகத் திட்பமும் நுட்பமும் நிறைந்தனவாக உள்ளன சிலவே. அத்தகைய நூல்கள் வெளிவருதலின் இன்றியமையாமையை உணர்ந்தே, கதை புனைவோரை—காவியம் படைப்போரை—கட்டுரையாளர்களை ஊக்குவித்தற்குத் தமிழக அரசு ஆண்டுதோறும் பரிசு வழங்கிப் பாராட்டி வருகிறது.

தரமிகுந்த நூல்களைத் தமிழில் வெளியிட்டு உதவும் தகுதிமிக்காரையும் நெஞ்சார வாழ்த்த வேண்டும் என்ற கடமை உணர்ச்சி மேலீட்டால் பதிப்பகத்தாருக்கும் பாராட்டிதழ் வழங்கிச் சிறப்பித்து வருகிறது.

இத்திட்டம் முதன் முதலில் 1947இல் தொடங்கப்பெற்றது. 1960 வரை தமிழ் வளர்ச்சிக் கழகத்தால் செயற்படுத்தப்பட்டது. 1961 முதல் தமிழக அரசினால் இத்திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. தொடக்கத்தில் முதற் பரிசாக 1,000 உரூபாயும் இரண்டாம் பரிசாக சான்றிதழ் மட்டும் வழங்கப்பெற்று வந்தது.

17—4—1971 இல் இராசாசி மண்டபத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பரிசளித்த தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அவ்விழாவிலேயே இரண்டாம் பரிசாக சான்றிதழுடன் 500 உரூபாயும் வழங்கப்பெறும் எனவும், வரும் ஆண்டுகளிலிருந்து முதற் பரிசுத் தொகை 2,000 உரூபாய் ஆகவும், இரண்டாம் பரிசுத் தொகை 1000 உரூபாய் ஆகவும் உயர்த்தப்பெறும் எனவும் அறிவித்தார்கள்.

**அதன்படி 1972 ஆம் ஆண்டு முதல்**

**முதற் பரிசு ரூ. 2,000 ஆகவும்**

**இரண்டாம் பரிசு ரூ. 1,000 ஆகவும்**

வழங்கப் பெற்றுவந்தது. இந்நிலையே மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழக முதல்வராக மீண்டும் பொறுப்பேற்கும் வரை நீடித்தது.

15—1—1990இல் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாளில் மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், வரும் ஆண்டிலிருந்து,

முதற் பரிசு ரூ. 5,000 ஆகவும்

இரண்டாம் பரிசு ரூ. 3,000 ஆகவும்

மூன்றாம் பரிசு ரூ. 1,000 ஆகவும்

உயர்த்தி வழங்கப்பெறுமென அறிவித்தார்கள். அவ்வாறே பரிசுத் தொகைகள் வழங்கப்பெற்று வந்தன.

பின்னர் 10—3—1998 ஆம் நாளும் 13156/தவ1/3/95-II எண்ணுமிட்ட கடிதத்தில் கலைஞர் அவர்கள் பரிசுத் தொகை உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்தார்கள். அதற்கிணங்க

முதற் பரிசு ரூ. 10,000

இரண்டாம் பரிசு ரூ. 5,000

மூன்றாம் பரிசு ரூ. 2,000

என உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

1997 ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்ற நூல்களுக்கு மேற்காணும் வகையில் பரிசுகள் தற்போது வழங்கப்பெறுகின்றன. 42 நூலாசிரியர்கள் 41 நூல்களுக்கு மொத்தத்தில் 2,44,000 உருபாயைப் பரிசுத்தொகையாகப் பெறுகின்றனர். பரிசுகள் விவரமும் பரிசு பெறும் நூலாசிரியர்களைப் பற்றிய சிறுகுறிப்பும் இதில் இடம்பெற்றுள்ளன.

# பரிசுகள் பெறுவோர் விவரம்

73-10—2

| வரிசை எண். | தலைப்பு எண்ணும் பெயரும். | பரிசு நிலை. | நூலின் பெயர். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | 1. கவிதை | முதல் பரிசு | நாகநாட்டு இளவரசி பீலிவளை. |
| 2. | ,, | இரண்டாம் பரிசு | காதல் காவியம். |
| 3. | ,, | மூன்றாம் பரிசு | புதிய தமிழ் இயக்கம். |
| 4. | 2. புதினம் | முதல் பரிசு | கனவுக் கிராமம் |
| 5. | ,, | இரண்டாம் பரிசு | செம்பியன் தமிழவேள். |
| 6. | ,, | மூன்றாம் பரிசு | நீதியின் காவலர் நீதிபதி நீலமேகம். |
| 7. | 3. சிறுகதை | முதல் பரிசு | வண்ணங்கள் |
| 8. | ,, | இரண்டாம் பரிசு | சக்தி |
| 9. | ,, | மூன்றாம் பரிசு | ஒரு தொடர்கதை முற்றுப்பெறுகிறது. |
| 10. | 4. நாடகம் | முதல் பரிசு | செம்பியன் செல்வன் |
| 11. | ,, | இரண்டாம் பரிசு | ஒரு கனவுக் கா(வி)யம் |

**பட்டியல்.**

| நூலாசிரியர் பெயர். | பதிப்பகத்தின் பெயர். | பரிசுத் தொகை. |
|---|---|---|
| (5) | (6) | (7) |
| | | ரூ. |
| பாவலர் மணிவேலன். | குறிஞ்சிக்குமரன் பதிப்பகம், அரூர்-639 903. | 10,000 |
| புலவர் த. முருகேசன் | மணிவாசகர் பதிப்பகம், சென்னை-108. | 5,000 |
| புலவர் ப. சாத்தன் | அன்றில் பதிப்பகம், சென்னை-5. | 2,000 |
| அறிவியல் நம்பி (வெ. சுந்தரம்) | மதி நிலையம், சென்னை-14. | 10,000 |
| புலவர் பொறிஞர் செந்தமிழ்ச் சேய் | மின்வாரியத் தமிழார்வலர் தமிழ்ப்பணி அறக்கட்டளை, கடலூர். | 5,000 |
| முனைவர் திருக்குறள் சி. ராமகிருட்டினன் | கரிகாலன் பதிப்பகம், சென்னை-4. | 2,000 |
| ப. முருகேசன் | தனலெட்சுமி பதிப்பகம், சென்னை-17. | 10,000 |
| அய்க்கண் | மதி நிலையம், சென்னை-14. | 5,000 |
| சரோஜா பாண்டியன் | மணிமேகலைப் பிரசுரம், சென்னை-17. | 2,000 |
| வ.த. இராம சுப்பிரமணியம் | முல்லை நிலையம், சென்னை-17. | 10,000 |
| தனஞ்செயசாரதி | வாணி லட்சுமி பதிப்பகம், கோயம்புத்தூர். | 5,000 |

| வரிசை எண். | தலைப்பு எண்ணும் பெயரும். | பரிசு நிலை. | நூலின் பெயர். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 12. | நாடகம் | மூன்றாம் பரிசு | அறிவுப்பேரொளி புத்தர் பெருமான் (வரலாற்று நாடகம்). |
| 13. | 5. தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு பற்றிய நூல்கள். | முதல் பரிசு | சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களே ! |
| 14. | ,, | இரண்டாம் பரிசு | உலகம் பரவிய தமிழின் வேர்கள். |
| 15. | ,, | மூன்றாம் பரிசு | இதழியல் |
| 16. | 6. தமிழ்க் கலைகள், கட்டுரை, வாழ்க்கை வரலாறு, பயண நூல். | முதல் பரிசு | மாணிக்கச் செம்மல் |
| 17. | ,, | இரண்டாம் பரிசு | பண்பாளர் பன்னீர்செல்வம் |
| 18. | ,, | மூன்றாம் பரிசு | எண் கணிதத்தின் ஏந்தல் (சீனிவாச இராமானுஜன்). |
| 19. | 7. மானுடவியல், சமூகவியல், அரசியல் நிலவியல் சட்டம். | முதல் பரிசு | இந்தியாவில் தேசிய இனங்களும் தமிழ்த் தேசியமும். |
| 20. | ,, | இரண்டாம் பரிசு | பெண்ணுரிமையும் இயற்கையின் அடிப்படை விதியும். |
| 21. | ,, | மூன்றாம் பரிசு | உயிர்ப்பிக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள். |

| நூலாசிரியர் பெயர். | பதிப்பகத்தின் பெயர். | பரிசுத் தொகை. |
|---|---|---|
| (5) | (6) | (7) |
| | | ரூ. |
| பட்டுக்கோட்டை குமாரவேல் | இந்துமலர் வெளியீடு, சென்னை-41. | 2,000 |
| முனைவர் ச. அகத்திய லிங்கம் | மணிவாசகர் பதிப்பகம், சென்னை-108. | 10,000 |
| முனைவர் கு. அரசேந்திரன் | ரெத்னம் வெளியீடு, இங்கிலாந்து. | 5,000 |
| முனைவர் சு. சக்திவேல் | மணிவாசகர் பதிப்பகம், சென்னை-108. | 2,000 |
| முனைவர் இரா. சாரங்க பாணி | ஷை | 10,000 |
| பேரா. மு. ச. விமலானந்தம் | சேகர் பதிப்பகம் சென்னை-78. | 5,000 |
| கோவி. பழநி | சூடாமணி பிரசுரம், சென்னை-33. | 2,000 |
| கு.ச. ஆனந்தன் | தங்கம் பதிப்பகம், ஈரோடு மாவட்டம். | 10,000 |
| வி.ஏ.எம். (வ. அழகுமுத்து) | வடமலையான் நிலையம், சென்னை-79. | 5,000 |
| ப்பி.எல். இரா சேந்திரன் | சங்கீதா பதிப்பகம், சென்னை-14. | 2,000 |

| வரிசை எண். | தலைப்பு எண்ணும் பெயரும். | பரிசு நிலை. | நூலின் பெயர். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 22. | 8. பொருளியல், வணிகவியல், நிருவாக மேலாண்மை. | முதல் பரிசு | நிர்வாகவியல் வரலாறு. |
| 23. | ,, | இரண்டாம் பரிசு | இன்றே இப்பொழுதே தொடங்குங்கள் வணிகம். |
| 24. | 9. கணிதவியல், வானியல், இயற்பியல், வேதியியல். | முதல் பரிசு | இலக்கியங்களில் வானியல். |
| 25. | 10. மருத்துவம், நலவியல். | முதல் பரிசு | குழந்தைகள் மனநலம். |
| 26. | ,, | இரண்டாம் பரிசு | ஆஸ்துமாவிற்கு புதிய சிகிச்சை முறைகள். |
| 27. | ,, | மூன்றாம் பரிசு | பெண்ணே உனக்காக. |
| 28. | 11. தத்துவம், சமயம், அளவையியல், அறவியல். | முதல் பரிசு | தொன்மக்கதைகள் கோட்பாட்டு ஆய்வுகள். |
| 29. | ,, | இரண்டாம் பரிசு | கம்பரின் அறவியல் |
| 30. | ,, | மூன்றாம் பரிசு | தமிழகத்தில் உலகாயதம் |
| 31. | 12. உயிரியல், கானியல், வேளாண்மை, கால்நடை பேணுகை, கால்நடை மருத்துவம். | முதல் பரிசு | நம் சுற்றுச்சூழல் |
| 32. | ,, | இரண்டாம் பரிசு | வானியலும் வேளாண்மையும். |

| நூலாசிரியர் பெயர். | பதிப்பகத்தின் பெயர். | பரிசுத் தொகை. |
|---|---|---|
| (5) | (6) | (7) |
| | | ரூ. |
| ஆர். நடராசன் | மணியம் பதிப்பகம், குறிஞ்சிப்பாடி-607 302. | 10,000 |
| பா. இராமமூர்த்தி | திலகம் வெளியீடுகள், சென்னை-48. | 5,000 |
| முனைவர் அ. சிவபெருமாள் | நூல் வெளியீட்டுத் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அண்ணாமலைக் நகர்-608 002. | 10,000 |
| மரு. மா. திருநாவுக்கரசு. | வானதி பதிப்பகம், சென்னை-600 017. | 10,000 |
| மரு. முத்துச் செல்லக்குமார். | கற்பகம் புத்தகாலயம், சென்னை-17. | 5,000 |
| விஜயலட்சுமி நரேந்திரன். | பூம்புகார் பதிப்பகம், சென்னை-108. | 2,000 |
| முனைவர் சரசுவதி வேணுகோபால். | தாமரை வெளியீடு, மதுரை-625 014. | 10,000 |
| முனைவர் அ. அறிவுநம்பி. | அமுதன் நூலகம், புதுச்சேரி-14. | 5,000 |
| முனைவர் கி. முப்பால் மணி. | நியூசெஞ்சுரி புத்தக நிலையம். சென்னை-98. | 2,000 |
| நீ.த. கிருட்டிணன் | சுபா பதிப்பகம், நாகர்கோவில்-629 002. | 5,000 |
| முனைவர் கு. சந்தானகுமார் | | 5,000 |
| பொறிஞர் கே. ஆர். திருவேங்கடசாமி. | நியூசெஞ்சுரி புத்தக நிலையம், சென்னை-600 098. | 5,000 |

| வரிசை எண். | தலைப்பு எண்ணும் பெயரும். | பரிசுநிலை. | நூலின் பெயர். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 33. | 12. உயிரியல், கானியல், வேளாண்மை, கால்நடை பேணுகை, கால்நடை மருத்துவம். | மூன்றாம் பரிசு | பந்தயப் புறாக்கள் |
| 34. | 13. பொறியியல், தொழில் நுட்பவியல். | முதல் பரிசு | ஊர்திப் பொறியியல் |
| 35. | ,, | இரண்டாம் பரிசு | மின்னியங்கி மீளச் சுற்றுதல். |
| 36. | 14. வரலாறு, தொல்பொருளியல். | முதல் பரிசு | தமிழ்ப் பண்பாட்டு வரலாறு. |
| 37. | ,, | இரண்டாம் பரிசு | ஐ.நா. மனிதகுல நம்பிக்கை ஒளி. |
| 38. | ,, | மூன்றாம் பரிசு | கசாலின் பார்வையில் அரிக்கமேடு. |
| 39. | 15. குழந்தை இலக்கியம் | முதல் பரிசு | பாவேந்தரும், பூந்தளிர்களும். |
| 40. | ,, | இரண்டாம் பரிசு | தமிழ்த்தென்றலின் கதை. |
| 41. | ,, | மூன்றாம் பரிசு | நற்பண்பை வளர்க்கும் சிறுவர் கதைகள். |

| நூலாசிரியர். பெயர். | பதிப்பகத்தின் பெயர். | பரிசுத் தொகை. |
|---|---|---|
| (5) | (6) | (7) |
| பு.ச. முருகு. சுப்பிரமணியம் | காவ்யா, பெங்களூர்-38. | 2,000 |
| மா. பாலசுப்பிர மணியம் | காமாட்சி பதிப்பகம், சுங்குவார்சத்திரம்-106. | 10,000 |
| திருமதி கலா சான்சிராணி | கலா பதிப்பகம், சேலம்-636 004. | 5,000 |
| செ. வைத்திய லிங்கன் | நூல் வெளியீட்டுத் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்-608 001. | 10,000 |
| முனைவர் அடைக்கலம் சுப்பையன் | மணிவாசகர் பதிப்பகம், சென்னை-108. | 5,000 |
| முனைவர் சோ. முருகேசன் | அம்மாமுத்து பதிப்பகம், புதுச்சேரி. | 2,000 |
| புலவர் இலமா. தமிழ்நாவன் | கார்த்திக் பதிப்பகம், சென்னை-33. | 10,000 |
| வளவனூர் தி. பழநிச்சாமி | மீனா புத்தகப் பண்ணை, விழுப்புரம்-605 602. | 5,000 |
| கி. நல்லசிவம் | பிரியா நிலையம், சென்னை-14. | 2,000 |
| | மொத்தம் ... | 2,44,000 |

## 1. கவிதை

1. வண்டமிழ்க் கொண்டல் பாவலர் மணிவேலன்,

   4/95, குறிஞ்சி, பெரியார் நகர், அரூர்,
   தருமபுரி மாவட்டம்—636 903.

தருமபுரி மாவட்டம், அரூரில் 15—3—1932இல் பிறந்தவர். தாயார் திருமதி முத்துவேடியம்மாள், தந்தையார் திரு. பெரியண்ணன்.

தமக்கென்று ஒரு தரமும், கவிதை வழி எதையும் புலப்படுத்தும் திறமும் படைத்த கவிஞர். பிறமொழிக் கலப்பின்றி எழுதுபவர்.

இவர் எழுதிய 'நாகநாட்டு இளவரசி பீலிவளை' என்ற வரலாற்றுக் காப்பியம் 'முதற் பரிசு' பெறுகிறது.

2. புலவர் த. முருகேசன்,

   90, ஆறாவது குறுக்குத் தெரு,
   கனகசபை நகர்,
   சிதம்பரம், கடலூர் மாவட்டம்-608 001.

விருத்தாசலம் வட்டம், தருமநல்லூரில் 24—6—1921இல் பிறந்தவர். தாயார் திருமதி பார்வதி, தந்தையார் திரு. தங்கவேல்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் புலவர் பட்டம் பெற்றவர். நாற்பது ஆண்டுகள் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றியவர்.

ஆத்திசூடிக்கும், கொன்றைவேந்தனுக்கும் உரை எழுதியுள்ளார். 'மரங்கள்' என்னும் இவரது கவிதை நூல் 1993 ஆம் ஆண்டில் மூன்றாம் பரிசு பெற்றுள்ளது.

தமிழக அரசின் நல்லாசிரியர் விருதும் தேசிய விருதும் பெற்றவர்.

இவர் எழுதிய 'காதல் காவியம்' எனும் நூல் இரண்டாம் பரிசு பெறுகிறது.

3. புலவர் ப. சாத்தன்,

   8, ஆனந்தகம், பத்தாம் வீதி,
   மங்களபுரம், சேத்துப்பட்டு,
   சென்னை-600 031.

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், தேயாறு என்னும் ஊரில் 7—11—1935இல் பிறந்தவர். தாயார் திருமதி பொன்னம்மாள், தந்தையார் திரு. மு. பட்டுசாமி.

தமிழாசிரியராகப் பணியாற்றியவர். காவியம், தென்றல், தென்மொழி, உணர்வு, பைங்கிளி, நீலக்குயில், மக்கள், செங்கோல், யாதும் ஊரே, உலகின் முதல் மாந்தர் முதல் மொழி, அறப்போர், போர்வாள் மற்றும் தமிழ் அமைப்புகளின் மாநாட்டு மலர்கள் ஆகியவற்றில் இவரின் எழுத்தோவியங்கள் இடம் பெற்றுள்ளன.

இவர் எழுதிய ‘ புதிய தமிழ் இயக்கம் ’ எனும் நூல் மூன்றாம் பரிசு பெறுகிறது.

4. **திரு. அறிவியல் நம்பி,**
(வெ. சுந்தரம்),
64, பாரதி சாலை,
திருவல்லிக்கேணி,
சென்னை-600 005.

தூத்துக்குடி மாவட்டம், தங்கம்மாள்புரத்தில் 18—2—1953இல் பிறந்தவர். தாயார் திருமதி எம். அன்னலட்சுமி அம்மாள், தந்தையார் திரு. ச. வென்னிமலையன்.

பட்டப் படிப்பினை முடித்த இவர் சிறிது கால-நூலகப் பணிக்குப் பிறகு தன்னைப் பாத்திர வியாபாரத்தில் ஈடுபடுத்திக் கொண்டவர்.

இவர் எழுதிய ‘‘கனவுக் கிராமம்’’ எனும் நூல் முதல் பரிசு பெறுகிறது.

5. **புலவர் பொறிஞர் சி. செந்தமிழ்ச்சேய்,**
சேயகம்,
49, துரைசாமி நகர்,
கடலூர்-607 001.

விழுப்புரம் மாவட்டம், அரசூரில் 14—7—1941இல் பிறந்தவர். தாயார் திருமதி சி. சொர்ணம், தந்தையார் திரு. நா. சின்னசாமி.

ஆசிரியராகவும், பின்னர் தமிழ்நாடு மின்வாரியத்திலும் பணியாற்றியவர்.

சோலைமலர், பூம்பொழில் ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

இவர் எழுதிய ‘‘செம்பியன் தமிழவேள்’’ எனும் நூல் இரண்டாம் பரிசு பெறுகிறது.

6. முனைவர் திருக்குறள் சி. இராமகிருட்டிணன்,

16, காரணீசுவரர் கோயில் முதல் வீதி,
மயிலாப்பூர், சென்னை—4.

கோயம்புத்தூர் மாவட்டம், சிங்காநல்லூரில் 2—5—1929இல் பிறந்தவர், தாயார் திருமதி நெஞ்சம்மாள், தந்தையார் திரு. சின்ன அய்யன்.

இவர் நீதிபதியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். வளரும் சனநாயகத்தில் நீதிமன்றங்கள், நீதிவானில் ஒரு விடிவெள்ளி, வரலாற்றில் நெஞ்சையள்ளும் தமிழக உயர் நீதிமன்றம், திருவள்ளுவர் இசைப் பாடல்கள் ஆகிய நூல்களையும், பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

இவர் எழுதிய 'குடிசையும் கோபுரமும்' எனும் நூல் 1995 ஆம் ஆண்டில் தமிழக அரசின் முதற் பரிசு பெற்றுள்ளது.

இவர் எழுதிய 'நீதியின் காவலர் நீதிபதி நீலமேகம்' எனும் நூல் மூன்றாம் பரிசு பெறுகிறது.

3. சிறுகதை.

7. திரு. ப. முருகேசன்,

9, மொட்டையப் படையாச்சி வீதி,
முதலியார்பேட்டை,
புதுச்சேரி-605 004.

புதுச்சேரியில் 14—10—1951 இல் பிறந்தவர். தாயார் திருமதி கனகவல்லி, தந்தையார் திரு. பழனிமுத்து.

ஆசிரியராகப் பணிபுரிந்து வருபவர். எண்பதுக்கு மேற்பட்ட சிறு கதைகளைப் பல்வேறு இதழ்களில் எழுதியுள்ளார். நாற்பதுக்கு மேற்பட்ட வானொலி நாடகங்களை எழுதியுள்ளார்.

1996 இல் புதுச்சேரி மாநில நல்லாசிரியர் விருது பெற்றுள்ளார்.

இவர் எழுதிய ''வண்ணங்கள்'' எனும் நூல் முதல் பரிசு பெறுகிறது.

8. **திரு. அய்க்கண்,**

14, கைலாச நகர் மூன்றாம் வீதி,
காரைக்குடி-630 002.

சிவகங்கை மாவட்டம், கோட்டையூரில் 1—9—1935 இல் பிறந்தவர். தாயார் திருமதி அழகம்மை, தந்தையார் திரு. முத்தையா.

இவர் 800-க்கு மேற்பட்ட சிறுகதைகளையும் தொடர்கதைகளையும் எழுதியுள்ளார். இவரது 'பிற்பகல்' எனும் சிறுகதைக்கு 1987 ஆம் ஆண்டில் முதல் பரிசினைப் பெற்றுள்ளவர். இவருடைய 'வேர்', 'பொய்க்கால் குதிரைகள்' என்ற நூல்கள் சிங்கப்பூரில் தமிழ்ப் பாடநூல்களாக வைக்கப்பெற்றுள்ளன.

இவர் எழுதிய ''சக்தி'' எனும் நூல் இரண்டாம் பரிசு பெறுகிறது.

9. **திருமதி சரோஜா பாண்டியன்,**

1-3, பாரிசாதம் தெரு,
எழில் நகர்,
புதுநத்தம் சாலை,
மதுரை-625 014.

விருதுநகரில் 6—10—1932இல் பிறந்தவர். கணவர் திரு. பி. துரைராச பாண்டியன்.

தமிழாசிரியராகப் பணிபுரிந்தவர். குறள் விளக்கக் கதைகள், பல்சுவைக் கதைகள் (மொழி பெயர்ப்பு நூல்) ஆகிய நூல்களைப் படைத்துள்ளார்.

இவர் எழுதிய '' ஒரு தொடர்கதை முற்றுப் பெறுகிறது '' எனும் நூல் மூன்றாம் பரிசு பெறுகிறது.

## 4. நாடகம்.

10. **திரு. வ. த. இராமசுப்பிரமணியம்,**

64, காந்தி நகர், மூன்றாவது தெரு,
காஞ்சிபுரம்-631 501.

காஞ்சிபுரம் மாவட்டம், வயலக்காவூர் கிராமத்தில் 11—6—1936இல் பிறந்தவர். தாயார் திருமதி முனியம்மாள், தந்தையார் திரு. தங்கவேல்.

ஆசிரியராகவும், நூலகராகவும், உதவிக் கருவூலக் கணக்கு அலுவலராகவும் பணியாற்றியுள்ளவர்.

இருபது நூல்களையும், உரைநூல்களையும் எழுதியுள்ளார்.

இவர் எழுதிய ''செம்பியன் செல்வன்'' எனும் நூல் முதற் பரிசு பெறுகிறது.

11. திரு. தனஞ்செயசாரதி,

எண் 2, இராமசாமி கவுண்டர் மனைப் பிரிவு,
தடாகம் சாலை,
இரத்தினசபாபதிபுரம்,
கோயம்புத்தூர்-2.

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், தனியாமங்கலம் என்னும் ஊரில் 10–5–1934இல் பிறந்தவர். தந்தையார் தெய்வத்திரு துரைசாமி.

35 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றியவர். புதுயுகத் துறவியின் புரட்சிக் கர்ஜனை, கலீல் கிப்ரானின் இரு கருவூல வைரங்கள் ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

இவர் எழுதிய ''ஒரு கனவுக் கா(வி)யம்'' எனும் நூல் இரண்டாம் பரிசு பெறுகிறது.

12. கலைமாமணி திரு. பட்டுக்கோட்டை குமாரவேல்,

57, டி. எஸ். வி. கோவில் தெரு,
மைலாப்பூர்,
சென்னை-600 004.

தஞ்சாவூர் மாவட்டம், இராஜாமடத்தில் 26–2–1925இல் பிறந்தவர். தாயார் திருமதி பக்கிரி அம்மாள், தந்தையார் திரு. சீ. பொன்னுசாமி.

இந்திய வானொலி நிலையங்களில் நாடக ஆசிரியராகப் பணி புரிந்து ஓய்வு பெற்றவர். புதினம், நாடகம், மேடை நாடகம் எனும் வகையில் பல நூல்களை எழுதியுள்ளார். திரைப்படக் கதையாசிரியர்.

கலைமாமணி, நாடகச் செம்மல், முத்தமிழ் வித்தகர் போன்ற பட்டங்களைப் பெற்றவர்.

இவர் எழுதிய ''அறிவுப் பேரொளி புத்தர் பெருமான்'' எனும் வரலாற்று நாடக நூல் மூன்றாவது பரிசு பெறுகிறது.

## 5. தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு பற்றிய நூல்கள்.

13. முனைவர் ச. அகத்தியலிங்கம்,

155, மாரியப்பா நகர்,
அண்ணாமலை நகர்,
சிதம்பரம்-608 002.

கன்னியாகுமரி மாவட்டம், கேசவன்புதூரில் 19–8–1929இல் பிறந்தவர். தாயார் திருமதி சா. அருணாசலத்தம்மாள், தந்தையார் திரு. ம. சண்முகம்.

பேராசிரியராகவும், இயக்குநராகவும், தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகவும் பணி புரிந்தவர்.

''சங்கத் தமிழ்'' எனும் பெயரில் ஐந்து தொகுதி நூல்களையும், ''உலக மொழிகள்'' எனும் பெயரில் ஐந்து தொகுதி நூல்களையும், ''திராவிட மொழிகள்'' எனும் பெயரில் இரண்டு தொகுதி நூல் களையும் எழுதியுள்ளவர்.

இவர் எழுதிய ''சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களே!'' எனும் நூல் முதற் பரிசு பெறுகிறது.

14. முனைவர் கு. அரசேந்திரன்,

19, பெருஞ்சித்திரனார் தெரு,
சிட்லபாக்கம்,
சென்னை-600 064.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கொக்கரணையில் 12–7–1955இல் பிறந்தவர். தாயார் திருமதி அம்மாதனம், தந்தையார் திரு. சு. குருசாமி.

சொல்லாராய்ச்சியில் மிகுந்த ஈடுபாடு உடையவர். கால் அடிதாள், (சொல் வரலாறு), சொல்வழிப் புதைபொருள் (சொல்லாய்வு) உயிர்க்கதறல் (பாடல் தொகுதி) போன்ற நூல்களை எழுதியுள்ளார்.

இவர் எழுதிய ''உலகம் பரவிய தமிழின் வேர் : கல்'' எனும் நூல் இரண்டாம் பரிசு பெறுகிறது.

15. முனைவர் சு. சக்திவேல்,

நாட்டுப்புறவியல் துறைத் தலைவர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

தேனி மாவட்டம், கோத்தனூத்து எனும் ஊரில் 15-1-1939ஆம் ஆண்டில் பிறந்தவர்.

மொழியியல், நாட்டுப்புறவியல், மானிடவியல் போன்ற துறைகளில் 42 நூல்களை எழுதியுள்ளவர்.

இவர் எழுதிய "இதழியல்" எனும் நூல் மூன்றாம் பரிசு பெறுகிறது.

6. தமிழ்க் கலைகள், கட்டுரை, வாழ்க்கை வரலாறு, பயணநூல்.

16. முனைவர் இரா. சாரங்கபாணி,

"குறளில்லம்",
330, மாரியப்பா நகர்,
அண்ணாமலை நகர்-608 002.

கடலூர் மாவட்டம், தேவன்குடியில் 18-9-1925இல் பிறந்தவர். தாயார் திருமதி சனமாலிகை அம்மையார். தந்தையார் திரு. பொ. இராசகோபால்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றியவர்.

இயற்கை விருந்து, குறள் விருந்து, பரிபாடல் திறன், திருக்குறள் உரையாசிரியர்கள், சங்கச் சான்றோர்கள், முதலிய நூல்களை எழுதியுள்ளார்.

தமிழ்நாடு அரசின் 1998ஆம் ஆண்டிற்கான திருவள்ளுவர் விருதினைப் பெற்றவர்.

இவர் எழுதிய "மாணிக்கச் செம்மல்" எனும் நூல் முதற் பரிசு பெறுகிறது.

17. பேராசிரியர் மது. ச. விமலானந்தம்,

412, இடையர் தெரு,
தஞ்சாவூர்-613 001.

தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூரில் 27–9–1935 இல் பிறந்தவர், தாயார் திருமதி ச. அம்மணி அம்மாள், தந்தையார் திரு. ம.து. சச்சிதானந்தம்.

'திறனாய்வுத் தென்றல்', 'முத்தமிழ் ஏந்தல்' எனும் சிறப்புப் பட்டங்களைப் பெற்றவர். சிலம்பப் புதையல், பாட்டும் சபதமும், தாயகம் தந்த நாயகம், தமிழ் இலக்கிய வரலாறு, இலக்கிய ஜோதி, இலக்கியம், பாரதி சபதம், கட்டுரைக் கனிகள் முதலிய 35 நூல்களை எழுதியுள்ளவர்.

'தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம்' எனும் நூலுக்கு 1987-ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் இரண்டாம் பரிசைப் பெற்றவர்.

இவர் எழுதிய 'பண்பாளர் பன்னீர்செல்வம்' எனும் நூல் இரண்டாம் பரிசு பெறுகிறது.

18. திரு. கோவி. பழநி,

38, கலைமகள் நகர்,
இரண்டாவது முதன்மைச் சாலை,
ஈக்காட்டுத்தாங்கல்,
சென்னை-600 097.

விழுப்புரம் மாவட்டம், நல்லாமூர் கிராமத்தில் 17–05–1963 இல் பிறந்தவர். தாயார் திருமதி தனலட்சுமி அம்மாள், தந்தையார் திரு. ந. கோவிந்தசாமி.

கணித ஆசிரியராகப் பணிபுரிந்து வருபவர். அறிவியல் கணித அறிஞர்கள் எனும் நூலினை எழுதியுள்ளவர்.

இவர் எழுதிய 'எண் கணிதத்தின் ஏந்தல்' எனும் நூல் மூன்றாம் பரிசு பெறுகிறது.

7. மானுடவியல், சமூகவியல், அரசியல், நிலவியல், சட்டம்.

19. கு. ச. ஆனந்தன்,

72, பாரதி வீதி,
கோபிசெட்டிபாளையம்,
ஈரோடு மாவட்டம்-638 452.

கோயம்புத்தூர் மாவட்டம், தெலுங்குபாளையத்தில் 6-5-1933இல் பிறந்தவர், தாயார் திருமதி அலமேலு அம்மாள், தந்தையார் திரு. குப்பு செட்டியார்.

மலர்க மாநில சுயாட்சி, மாநில சுயாட்சியும் இந்தியப் பொருளாதாரமும், 'திராவிட இயக்கங்களின் பார்வையில்', 'இந்து சமயம்', 'வள்ளுவரின் மெய்யியல்', திருக்குறள் கூறும் பெண்மை' போன்ற நூல்களை எழுதியுள்ளவர். இவர் 1990ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருதினைப் பெற்றவர்.

இவர் எழுதிய 'இந்தியாவில் தேசிய இனங்களும் தமிழ்த் தேசியமும்' எனும் நூல் முதற் பரிசு பெறுகிறது.

20. திரு. வ. அழகுமுத்து (வி.ஏ.எம்.),

212, பி.எஎல்., 14ஆவது முதன்மைச் சாலை, அண்ணாநகர்,
சென்னை-600 040.

மியான்மர் (பர்மா) நாட்டில் பெகு மாவட்டத்தில், தன்னாபீன் என்ற ஊரில் 18-1-1925இல் பிறந்தவர். தாயார் திருமதி சீரங்கத்தம்மாள், தந்தையார் திரு. வடமலையான்.

வி.ஏ.எம். எனும் பெயரில் எழுதி வருபவர், இந்திய தேசியப் படையில் பணிபுரிந்தவர். 'சிறந்த தமிழ் எழுத்தாளர்' எனும் சிறப்புப் பட்டம் பெற்றுள்ளவர்.

இவரது 'பொருள் முதல் வாதம் என்றால் என்ன?' எனும் நூல் 1991 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் மூன்றாம் பரிசினைப் பெற்றுள்ளது.

இவர் எழுதிய 'பெண் ணுரிமையும் இயற்கையின் அடிப்படை விதியும்' எனும் நூல் இரண்டாம் பரிசு பெறுகிறது.

21. திரு. பி.எல். இராசேந்திரன்,
14/2, பீட்டர்சு குடியிருப்பு வளாகம்,
இராயப்பேட்டை, சென்னை-600 014.

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில் 7-11-1940இல் பிறந்தவர். தாயார் திருமதி பட்டம்மாள், தந்தையார் திரு. இரா. இலக்குமணன்.

புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனிடம் தமிழிலக்கணம் பயின்றவர். இதழியல் துறையில் பணியாற்றியவர். சமுதாயப் பிரச்சினைகளை ஒட்டிய மரபுக் கவிதைகளைப் படைத்துள்ள கவிஞர்.

'பொழுது புலர்ந்தது' என்னும் நூலுக்குத் தமிழ்நாடு அரசின் முதற் பரிசை 1981 ஆம் ஆண்டில் பெற்றவர்.

இவர் எழுதிய 'உயிர்ப்பிக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள்' எனும் நூல் மூன்றாம் பரிசு பெறுகிறது.

8. பொருளியல், வணிகவியல், நிருவாக மேலாண்மை.

22. திரு. இரா. நடராசன்,
56, இரண்டாவது குறுக்குத் தெரு,
சாயிநகர் இணைப்பு,
சின்மயா நகர், சென்னை-600 111.

தஞ்சாவூர் மாவட்டம், விஷ்ணம்பேட்டையில் 19-08-1945இல் பிறந்தவர். தாயார் திருமதி தங்கம், தந்தையார் திரு. இராமச்சந்திரன்.

நகைச்சுவை உணர்வும், குறிப்புப் பொருளும் ததும்பக் கதைகளையும் கட்டுரைகளையும் படைப்பவர். தமிழ்க் கவிதைகளையும் கதைகளையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளவர். தமிழிலும் ஆங்கிலத்திலுமாகப் பத்து நூல்களை எழுதியுள்ளவர்.

இவர் எழுதிய 'நிர்வாகவியல் வரலாறு' எனும் நூல் முதற் பரிசு பெறுகிறது.

23. திரு. பா. இராமமூர்த்தி,
1/429, தேசிய நெடுஞ்சாலை,
வண்டலூர், சென்னை-600 048.

திருவாரூர் மாவட்டம், சன்னாநல்லூரில் 20-5-1939இல் பிறந்தவர். தாயார் திருமதி தெய்வானை, தந்தையார் திரு. நா. பாவாடை.

புத்திசாலிக் குழந்தைகளை உருவாக்குவது, வெற்றி அடைந்த வியாபாரக் கனவுகள், உழைக்கிறார்கள்-வெற்றி பெறுகிறார்கள், மிகவும் எளிது வேலை கிடைப்பது, உண்மையின் ஊர்வலங்கள் போன்ற பதினொரு நூல்களையும், இதழ்களில் கட்டுரைகள் பலவற்றையும் எழுதியுள்ளவர்.

இவர் எழுதிய 'இன்றே இப்பொழுதே தொடங்குங்கள் வணிகம்' எனும் நூல் இரண்டாம் பரிசு பெறுகிறது.

## 9. கணிதவியல், வானியல், இயற்பியல், வேதியியல்.

24. முனைவர் அ. சிவபெருமான்,
4-சி, வெள்ளிவிழாச் சாலை,
(தெற்குப் பள்ளி எதிரில்),
செயங்கொண்டம் அஞ்சல்,
பெரம்பலூர் மாவட்டம்-621 802.

பெரம்பலூர் மாவட்டம், செயங்கொண்டத்தில் 29-11-1960இல் பிறந்தவர். தாயார் திருமதி சம்பகது, தந்தையார் திரு. அடிகளாசிரியர்.

தமிழரின் வானியல் திறன், நந்தனார் சரித்திரம், கயிலைச் செல்வரின் கயிலைப் பயணம் ஆகிய நூல்களையும் ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றையும் எழுதியுள்ளார்.

இவர் எழுதிய 'இலக்கியங்களில் வானியல்' எனும் நூல் முதற் பரிசு பெறுகிறது.

## 10. மருத்துவம், நலவியல்.

25. மருத்துவர் மா. திருநாவுக்கரசு,
18-ஏ, பிளவர்சு சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை-600 010.

சேலம் மாவட்டம், சிவதாபுரத்தில் 6-6-1952இல் பிறந்தவர். தாயார் திருமதி பழனியம்மாள், தந்தையார் திரு.எஸ்.எல். மாணிக்கம்.

சென்னை பொது மருத்துவமனையின் மனநலப் பிரிவில் சிறப்பு மனநல மருத்துவராகவும், சென்னை மருத்துவக் கல்லூரியின் மனநலப் பிரிவு உதவிப் பேராசிரியராகவும் பணியாற்றி வருகிறார்.

குழந்தைகளின் மனநலம் குறித்துப் பல கட்டுரைகள் எழுதியுள்ளார்.

இவர் எழுதிய 'குழந்தைகள் மனநலம்' எனும் நூல் முதற் பரிசு பெறுகிறது.

26. மருத்துவர் முத்துச் செல்லக்குமார்,
6-ஏ, பாலாசி அடுக்கு மாளிகை,
பத்மாவதி நகர், விருகம்பாக்கம், சென்னை-600 092.

இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரத்தில் 15-3-1964 இல் பிறந்தவர். தாயார் திருமதி ருக்மணி, தந்தையார் திரு.எம். சுப்பையா பாண்டியன்.

பத்து மருத்துவ நூல்களையும், நான்கு பொது நூல்களையும் எழுதியுள்ளவர். பல்வேறு இதழ்களில் உடல்நலம் குறித்த கட்டுரைகளை எழுதி வருபவர்.

இவர் எழுதிய 'ஆஸ்துமாவிற்கு புதிய சிகிச்சை முறைகள்' எனும் நூல் இரண்டாம் பரிசு பெறுகிறது.

27. திருமதி விசயலெட்சுமி நரேந்திரன்,
623, கீழ வீதி,
தஞ்சாவூர்-613 001.

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூரில் 9-9-1955இல் பிறந்தவர். தாயார் திருமதி இந்திராணி, தந்தையார் திரு. கு. செல்வரத்தினம்.

பெண் நோய்கள் குறித்து ஐம்பதுக்கு மேற்பட்ட கட்டுரைகளை எழுதியவர். நோயை வெல்வோம், வயிற்று நோய்களும் அவற்றின் மருத்துவமும் எனும் நூல்களின் இணை ஆசிரியர்.

இவர் எழுதிய 'பெண்ணே உனக்காக' எனும் நூல் மூன்றாம் பரிசு பெறுகிறது.

## 11. தத்துவம், சமயம், அளவையியல், அறவியல்.

28. முனைவர் சரசுவதி வேணுகோபால்,
பேராசிரியர், தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,
மதுரை-625 021.

விருதுநகர் மாவட்டம், சாத்தூரில் 12-12-1940இல் பிறந்தவர். தாயார் திருமதி இலக்குமி அம்மையார், தந்தையார் திரு. தி.சே. வேணுகோபாலன்.

கள ஆய்வில் சில அனுபவங்கள், தமிழக நாட்டுப்புறவியல் நாட்டுப்புறப் பாடல்கள், நாட்டுப்புறவியல் கோட்பாட்டு ஆய்வுகள் ஆகிய நூல்களை எழுதியுள்ளவர்.

இவர் எழுதிய 'தொன்மக் கதைகள் கோட்பாட்டு ஆய்வுகள்' எனும் நூல் முதற் பரிசு பெறுகிறது.

29. முனைவர் அ. அறிவுநம்பி,
பேராசிரியர், தமிழியல் துறை,
புதுவைப் பல்கலைக் கழகம்,
புதுச்சேரி-605 014.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் 10-11-1952இல் பிறந்தவர். தாயார் திருமதி இராசலட்சுமி, தந்தையார் திரு. பூ. அமிர்தலிங்கன்.

சிறந்த கவிஞர், பேச்சாளர், கூத்தும் சிலம்பும், தமிழகத்தில் தெருக்கூத்து, நாட்டுப்புறக் களங்கள், தமிழரின் வழிபாட்டுச் சிந்தனைகள், இலக்கிய வித்தகங்கள், தமிழ் வளர்ச்சி முதலிய நூல்களை எழுதியுள்ளார்.

இவர் எழுதிய 'கம்பரின் அறவியல்' எனும் நூல் இரண்டாம் பரிசு பெறுகிறது.

30. முனைவர் கி. முப்பால்மணி,
358, கிரியம்மன் கோவில் தெரு,
பீளமேடு,
கோயம்புத்தூர்-641 004.

கோயம்புத்தூரில் 3-3-1942இல் பிறந்தவர். தாயார் திருமதி கிருட்டிணம்மாள், தந்தையார் திரு. அ. கிருட்டிணசாமி.

தமிழ்த் துறைத் தலைவராகப் பணிபுரிந்து வருபவர்.

இவர் எழுதிய 'தமிழகத்தில் உலகாயதம்' எனும் நூல் மூன்றாம் பரிசு பெறுகிறது.

12. உயிரியல், கானியல், வேளாண்மை, கால்நடை பேணுகை, கால்நடை மருத்துவம்.

31. பேராசிரியர் நீ. த. கிருட்டிணன்,
நாகர்கோவில்.

தெ.தி. இந்துக் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்து வருபவர்.

சுற்றுச் சூழல் துறையில் பட்டறிவு மிக்கவர். பல்வேறு சுற்றுச் சூழல் அமைப்புகளில் பங்குகொண்டு தொண்டு செய்பவர்.

32. முனைவர் கு. சந்தானக்குமார்,
52, எஃப், நாஞ்சில் நகர்,
நாகர்கோவில்-629 002.

தூத்துக்குடியில் 11–2–1944இல் பிறந்தவர். தந்தையார் திரு. ச. குருசாமி பிள்ளை.

ஒன்பது நூல்களை எழுதியுள்ளவர். முப்பதிற்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளைத் தமிழில் எழுதி வெளியிட்டுள்ளவர். தமிழ்நாடு அரசின் சிறந்த ஆசிரியருக்கான டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதினையும் ஸ்ரீராம்பாட்டியா சுற்றுச் சூழல் தேசிய விருதினையும் பெற்றவர்.

இவ்விருவரும் இணைந்து எழுதிய 'நம் சுற்றுச் சூழல்' எனும் நூல் முதற் பரிசு பெறுகிறது.

33. முனைவர் பொறிஞர் கே. ஆர். திருவேங்கடசாமி,
4-9, சுதர்மா,
99, ஏ. கே. சுவாமிநகர் முதல் தெரு,
கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.

கோயம்புத்தூர் மாவட்டம், அவிநாசி வட்டம், கைகாட்டிப் புதூரில் 23–9–1927இல் பிறந்தவர். தாயார் திருமதி இரங்கம்மாள், தந்தையார் திரு. கே. ஆர். இராமசாமி.

தமிழக அரசின் வேளாண்மைத் துறையில் மேற்பார்வைப் பொறியாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளவர். மண் அரிமானமும் தடுப்பு முறைகளும் என்பது பற்றி இவர் ஆங்கிலத்தில் எழுதிய நூலைத் தமிழக அரசு 1976 ஆம் ஆண்டு வெளியிட்டது.

இவர் எழுதிய "வானியலும் வேளாண்மையும்" எனும் நூல் இரண்டாம் பரிசு பெறுகிறது.

34. திரு. பு. ச. சுப்பிரமணியம் (முருகு சுப்பிரமணியம்),
60, இராமகிருட்டிண மடம் சாலை,
உல்சூர்,
பெங்களூர்-560 008.

கருநாடக மாநிலம், பெங்களூரில் 1-12-1932இல் பிறந்தவர். தாயார் திருமதி சாவித்திரி அம்மாள், தந்தையார் திரு. பு. சண்முகசுந்தரம்.

யாதும் ஊரே எனும் பயண நூலினை எழுதியுள்ளவர். இதழ்களில் சிறு கதைகளையும், கட்டுரைகளையும் எழுதியுள்ளார். சுற்றுலாச் செல்வர். புறாக் கலைஞர் என்ற சிறப்புப் பட்டங்கள் பெற்றுள்ளவர்.

இவர் எழுதிய ''பந்தயப் புறாக்கள்'' எனும் நூல் மூன்றாம் பரிசு பெறுகிறது.

## 13. பொறியியல், தொழில் நுட்பவியல்.

35. திரு. மா. பாலசுப்ரமணியம்,
4, பசனை கோவில் தெரு,
மாம்பாக்கம்,
சுங்குவார்சத்திரம் வழி-602 106.

காஞ்சிபுரம் மாவட்டம், மாம்பாக்கத்தில் 31-3-1948இல் பிறந்தவர். தாயார் திருமதி ஆதிலட்சுமி, தந்தையார் திரு. சி. மாரிமுத்து.

வைரம் பட்டை தீட்டுதல், பூதபுரி, சேம மின்கலம் பழுதுபார்த்தல் ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

இவர் எழுதிய ''ஊர்திப் பொறியியல்'' எனும் நூல் முதற் பரிசு பெறுகிறது.

36. திருமதி கலா. சான்சிராணி,
322-ஆ, பிரியா அடுக்குமாடி வளாகம்,
வசந்தம் உணவகம் அருகில்,
சேலம்-636 004.

விருதுநகர் மாவட்டம், காரியாப்பட்டியில் பிறந்தவர். தாயார் திருமதி ஞானசௌந்திரி, தந்தையார் திரு. ஆர். தியாகராசன்.

மிகு நுட்பம் கொண்ட கணிப்பொறி தமிழ்-ஆங்கில அச்சகத்தை நிறுவியவர்.

இவர் எழுதிய ''மின்னியங்கி மீளச்சுற்றுதல்'' எனும் நூல் இரண்டாம் பரிசு பெறுகிறது.

## 14. வரலாறு, தொல்பொருளியல்.

37. திரு. செ. வைத்தியலிங்கன்,
60, வாகீச நகர்,
சிதம்பரம்-608 001.

கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டையில், 20-9-1926இல் பிறந்தவர். தாயார் திருமதி. கோவிந்தம்மாள். தந்தையார் திரு. வ. செல்லமுத்து.

அழகுக் கலைத்திறன், வள்ளலார், வாழ்வியல், தமிழகக் கவின்கலை மாட்சி ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

இவர் எழுதிய ''தமிழ்ப் பண்பாட்டு வரலாறு'' எனும் நூல் முதற் பரிசு பெறுகிறது.

38. முனைவர் அடைக்கலம் சுப்பையன்,
5, பேராசிரியர் குடியிருப்பு,
அண்ணாமலை நகர்-608 002,
கடலூர் மாவட்டம்.

தஞ்சாவூர் மாவட்டம், ஆம்பலாப்பட்டு கிராமத்தில் 20-8-1945இல் பிறந்தவர். தாயார் திருமதி மாணிக்கம், தந்தையார் திரு. கு. அடைக்கலம்.

ஓர் உலக அரசு, மனித குடும்பத்தின் மாற்ற முடியாத உரிமைகள் ஆகிய நூல்களை எழுதியுள்ளார். 125க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். நடுவண் அரசின் இந்திய வரலாற்று ஆவண ஆணையத்தின் உறுப்பினராக உள்ளார்.

இவர் எழுதிய ''ஐ.நா. மனித குல நம்பிக்கை ஒளி'' எனும் நூல் இரண்டாம் பரிசு பெறுகிறது.

39. முனைவர் சோ. முருகேசன்,
6, செல்லான் நகர்,
புதுச்சேரி-605 011.

திருவரூர் மாவட்டம், நெற்குப்பையில் 6-11-1927இல் பிறந்தவர். தாயார் திருமதி பர்வதத்தம்மாள். தந்தையார் திரு. க. செ. சோமசுந்தரம்.

புதுவைக் கல்வித் துறையில் தொடக்கக் கல்வி ஆசிரியராகப் பணியில் அமர்ந்து, படிப்படியாக முன்னேறி, கல்வித் துறை இயக்குநராக உயர்ந்தவர். புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராகப் பணிபுரிந்தவர்.

இவர் எழுதிய ''கசாலின் பார்வையில் அரிக்கமேடு'' எனும் நூல் மூன்றாம் பரிசு பெறுகிறது.

## 15. குழந்தை இலக்கியம்.

40. புலவர் இலமா. தமிழ்நாவன்,
32, சாலையர் தெரு,
இராசக்கிராமணித் தோட்டம்,
அரசர் அண்ணாமலைபுரம்,
சென்னை-600 028.

விருதுநகர் மாவட்டம், திருத்தங்கலில் 9—7—1943இல் பிறந்தவர். தாயார் திருமதி இலக்குமி, தந்தையார் திரு. பெ. மாலை.

மொழியுணர்வும், இனவுணர்வும் மிக்கவர். தமிழ் அமைப்புகளில் பங்கு கொண்டு பணியாற்றுபவர். பத்தொன்பது நூல்களை எழுதியுள்ளவர்.

இவர் எழுதிய ''பாவேந்தரும் பூந்தளிர்களும்'' எனும் நூல் முதற் பரிசு பெறுகிறது.

41. திரு. தி. பழநிச்சாமி,
6, மாரியம்மன் கோவில் தெரு,
குமாரகுப்பம்,
வளவனூர்,
விழுப்புரம் மாவட்டம்-605 108.

விழுப்புரம் மாவட்டம், வளவனூரில் 11—6—1952இல் பிறந்தவர். தாயார் திருமதி வள்ளியம்மை, தந்தையார் திரு. சிங்கார திருநாவுக்கரசு.

வெய்யோன் விடு தூது, காணிக்கை தந்த கனிகள், குயில்தோப்பு, அரிமதியார் அன்புக்கும்மி, மழலைக் கனிகள், மந்திர தந்திர மர்மங்கள் ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

''நொய்யரிசி'' எனும் இவரது நூல் 1993ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் மூன்றாம் பரிசு பெற்றுள்ளது.

இவர் எழுதிய ''தமிழ்த் தென்றலின் கதை'' எனும் நூல் இரண்டாம் பரிசு பெறுகிறது.

42. திரு. இ. நல்லசிவம்,
3/11, கிழக்கு மாடவீதி,
கோவூர், சென்னை-602 101.

கன்னியாகுமரி மாவட்டம், கோதை கிராமத்தில் 3-6-1971இல் பிறந்தவர். தாயார் திருமதி ஈசுவரம்மாள், தந்தையார் திரு. கி. கிருஷ்ணன்.

குழந்தை இலக்கியத்தில் மிகுந்த ஈடுபாடு உடையவர்.

இவர் எழுதிய ''நற்பண்பை வளர்க்கும் சிறுவர் கதைகள்'' எனும் நூல் மூன்றாம் பரிசு பெறுகிறது.

## அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம்.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் 1978ஆம் ஆண்டில் 2—1—1978ஆம் நாளிட்ட அரசு கல்வித் துறை நிலையாணை எண் 1 இன் வாயிலாகத் தோற்றுவிக்கப்பெற்றது. இத் திட்டத்தின்படி திங்கள் தோறும் ரூ. 400 நிதியுதவியாக வழங்கப் பட்டு வந்தது. இத் தொகையை 10—9—1996 முதல் ரூ. 500 ஆக உயர்த்தி வழங்கிட 10—9—1996ஆம் நாளிட்ட தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை அரசாணை நிலை எண் 222 இல் வகை செய்யப் பட்டுள்ளது. மேலும், 24—4—1998 ஆம் நாளிட்ட த.வ.ப. (ம) பண்பாட்டுத் துறைக் கடித நிலை எண் 94/தவ1-2/98 இன்படி வாழ் நாள் முடிய நிதியுதவி வழங்குவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின்படி இதுவரை மொத்தம் 452 தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கப் பெற்றுள்ளது. இவ்வாண்டில் 7 அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கப்பெறுகிறது.

| | |
|---|---|
| 1977—78 ... ... ... | 5 |
| 1978—79 ... ... ... | 28 |
| 1979—80 ... ... ... | 34 |
| 1980—81 ... ... ... | 29 |
| 1981—82 ... ... ... | 25 |
| 1982—83 ... ... ... | 31 |
| 1983—84 ... ... ... | 32 |
| 1984—85 ... ... ... | 30 |
| 1985—86 ... ... ... | 30 |
| 1986—87 ... ... ... | 30 |
| 1987—88 — ... ... | 27 |
| 1988—89 ... ... ... | 21 |
| 1989—90 ... ... ... | 17 |
| 1990—91 ... ... ... | 21 |
| 1991—92 ... ... ... | 20 |
| 1992—93 ... ... ... | 16 |
| 1993—94 ... ... ... | 17 |
| 1994—95 ... ... ... | 15 |
| 1995—96 .. ... ... | 13 |
| 1996—97 — — — | 7 |
| 1997—98 ... ... ... | 4 |
| மொத்தம் ... | 452 |

## 1998-99ஆம் ஆண்டில் நிதியுதவி பெறும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள்

1. திரு. கோ. சாமிநாதன்,
21, இரண்டாம் தெரு,
ஸ்ரீராம் நகர்,
மருத்துவக்கல்லூரிச் சாலை,
தஞ்சாவூர்-4.

2. சுவாமி சிதாபானந்த,
4/46, மெயின் ரோடு,
வேம்படிதாளம் (அஞ்சல்),
சேலம் மாவட்டம்-637 504.

3. திரு. ஆ. சுந்தரம்,
81, திருவள்ளுவர்புரம் 2ஆம் தெரு,
சூளைமேடு,
சென்னை-600 094.

4. திரு. மா. சுப்பிரானந்த சுவாமி,
21எ/9, பேய் கோபுர வீதி,
திருவண்ணாமலை.

5. நெல்லை கா. சு. மணி (எ) சுப்பிரமணி,
7. கல்லத்தி தெரு,
திருநெல்வேலி-6.

6. திரு. நீல. துரைக்கண்ணன்,
சூராவாரிக் கண்டிகைக் கிராமம்,
சிறுபுழல்பேட்டை (அஞ்சல்),
கும்மிடிப்பூண்டி,
திருவள்ளூர் மாவட்டம்.

7. திரு. மு. முகம்மது மூசா (தண்ணன்),
7/3, முத்துவேல் நாயக்கர் வீதி,
செண்பகம் வளாகம்,
கோடம்பாக்கம்,
சென்னை-600 024.

தெள்ளு தமிழ் நடை
சின்னஞ் சிறிய இரண்டடிகள்

அள்ளு தொறுஞ் சுவை
உள்ளுதொறும் உணர்வாகும் வண்ணம்

கொள்ளும் அறம், பொருள்,
இன்பம் அனைத்தும் கொடுத்த திரு

வள்ளுவனைப் பெற்ற
தாற்பெற்றதே புகழ் வையகமே !

—பாவேந்தர்.

தமிழ்நாடு அரசுக்காக தமிழ்நாடு எழுதுபொருள்-அச்சுத் துறை
இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பெறுகிறது.